




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் கழக மகளிர் அணி சார்பில் நடைபெற்ற கலைஞர் 100 வினாடி – வினா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இரண்டாம் பரிசாக ரூ.6 லட்சமும் மூன்றாம் பரிசாக ரூ.3 லட்சமும் வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் பலர் பங்கேற்றனர்.

# 2 லட்சம் பேரை திராவிட இயக்க வரலாற்றை படிக்க வைத்து சாதனை!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல்பக்கத் தொடர்ச்சி

நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்த நிகழ்ச்சிக்குப் பெரும்பங்கு அளித்திருக்கிறார். உண்மைதான், கனிமொழியே இங்கு சொன்னார். நிதித்துறை அமைச்சர் என்கிற காரணத்தாலோ என்னவோ, பெரும்பங்கு அவருக்கு எப்போதும் உண்டு! அதேபோல, இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக அருமையாக இங்கே தொகுத்து வழங்கிய அருமைச் சகோதரர் கோவி.லெனின் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள், வாழ்த்துகள்!

**40 ஆயிரம் கேள்விகளை படிக்க வைத்துள்ளனர்!**

இவ்வளவு பெரிய போட்டியைத் தமிழ்நாடு முழுவதும் நடத்துவது சாதாரண செயல் அல்ல... எப்படி இந்தப் போட்டியை இவ்வளவு சிறப்பாக நடத்தினீர்கள் என்று தங்கை கனிமொழியிடம் நேற்று முன்தினம் கேட்டேன்... அவருடைய பதில் என்னை மலைக்க வைத்தது... உங்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளை உருவாக்க 15 பேர் கொண்ட குழுவை அமைத்து, அந்தக் குழு 250 புத்தகங்களை ஆய்வு செய்து, திராவிட இயக்கத்தின் வரலாறு – தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் – ஆகியோரின் வாழ்வு – தொண்டு – நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகள் – மக்கள்நலத் திட்டங்கள் என்று 40 ஆயிரம் கேள்விகளை உருவாக்கியிருக்கிறார்கள்... உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் கேள்விகளைக் கேட்டதைவிட, உங்களைப் படிக்க வைத்தது தான் உள்ளபடியே பாராட்டுக்குரியது! இதுதான் இந்தக் 'கலைஞர் 100 – வினாடி–வினா' போட்டியின் மிகப்பெரிய வெற்றி! மிகப்பெரிய சிறப்பு என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி, இந்த ஆண்டு நவம்பரில்தான் இந்தப் போட்டி நிறைவடைந்திருக்கிறது... சுமார் 14 மாத காலம் தமிழ்நாடு முழுவதும் திராவிட இயக்கத்தின் வரலாறு இளம்தலைமுறையிடம் விதைக்கபட்டிருக்கிறது! இந்தப் போட்டியின் கேள்விகளுக்கு பதில் தேடி, நீங்கள் தயாரானபோது, பழைய வரலாற்றைப் படித்திருப்பீர்கள். அதன்மூலம் புது சிந்தனைகள் உங்களுக்கு உருவாகியிருக்கும். இந்தச் சிந்தனைகள்தான் இந்த இயக்கத்தை தொடர்ந்து வழிநடத்தும்!

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இருந்து, இரண்டு லட்சத்துக்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கெடுத்த இந்தப் போட்டியின் வெற்றி என்பது, புது சிந்தனையாளர்களை உருவாக்குவதுதான்! இரண்டு லட்சம் பேரைத் திராவிட இயக்கத்தைப் பற்றிப் படிக்க வைத்ததன் மூலமாக, இந்தப் போட்டியின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது!

**வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள் – பாராட்டுகள்!**

18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் முதல் பரிசு பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கபிலன், உதயகுமார், நரேஷ்குமார்; இரண்டாவது பரிசு பெற்ற விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயபாலன், சோஃபியா, மோகன்ராஜ்; மூன்றாவது பரிசு பெற்ற சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மோகன், தியாகராஜன், மாதவி நாகமுத்து; நான்காவது பரிசு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கதிர்வேல், லட்சுமி, தீரமகாராஜன்; அதேபோல், பதினெட்டு வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதல் பரிசு பெற்ற மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த வள்ளிக்கண்ணு, சித்தி ஃபர்விஷா, தர்ஷினி; இரண்டாம் பரிசு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிதின் தங்கேஷ், அஜித்குமார், ஷேக் அமீன்; மூன்றாம் பரிசு பெற்ற சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ரஞ்சனா, ராஜஸ்ரீ, ஸ்ரீநதியா; நான்காம் பரிசு பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கோபிகா, வெண்ணிலா, வேல்முருகன் – என வெற்றி பெற்ற அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுகள்!

உங்களுடைய வெற்றி சாதாரண வெற்றி அல்ல. 2 லட்சம் பேரில் இருந்து நீங்கள் வென்றிருக்கிறீர்கள். திராவிட இயக்கம் 100 ஆண்டுகளைக் கடந்த இயக்கம். இதன் வரலாற்றை முழுமையாக அறிந்து – தெளிந்து – புரிந்து, அதை மனதில் பதிய வைத்திருப்பவர்களில் ஒருவராக உங்களை நீங்களும் தகுதிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், இப்போது நீங்கள் அனைவருமே 'Dravidian Encyclopedia'!

உங்களில் சிலர் பேட்டி கொடுத்ததைப் பார்த்தேன். ஒவ்வொருவரும் வெறுமனே வார்த்தைகளால் புகழாமல், தி.மு.க செய்த சாதனைகளால் புகழ்ந்தது, எனக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கொடுத்தது.

**இதுபோன்ற நிகழ்ச்சிகளால் எனக்குப் பெருமை – மகிழ்ச்சி!**

சில நாட்களுக்கு முன்னர், இதே கலைஞர் அரங்கில் தம்பி உதயநிதி ஏற்பாட்டில் நடத்தப்பட்ட 'என் உயிரினும் மேலான' இறுதிப் பேச்சுப் போட்டிக்கு 182 பேர் கூடினார்கள். அதில் இருந்து மூவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த 182 பேரும் இப்போது தமிழ்நாட்டு மேடைகளில் முழங்கும் பேச்சுப் போராளிகளாக வலம் வந்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது திராவிடக் களஞ்சியமாக நீங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தக் காட்சிதான் என்னை மட்டுமல்ல, இந்த இயக்கத்தில் இருக்கும் அனைவரையும் இன்றைக்குப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. பாராட்டும் வகையில் அந்தப் பணியை நீங்கள் இன்றைக்குத் தொடங்கி இருக்கிறீர்கள். இது போன்ற நிகழ்ச்சிகள்தான் எனக்குப் பெருமையும், மகிழ்ச்சியும் தருகிறது!

முதலிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 10 லட்சம் ரூபாய் பரிசுத்தொகையும், இரண்டாம் பரிசு 6 லட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசு 3 லட்சம் ரூபாயும், நான்காம் பரிசு 1 லட்சம் ரூபாயும், வெற்றியாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருக்கிறது.

உங்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள்... உங்களைப் போலவே பலரையும் உருவாக்கும் பணியை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது வாட்ஸ்அப் யுகம்! வாட்ஸ் அப்–இல், யாரோ ஃபார்வேர்டு செய்யும் செய்திகளை ஆராய்ந்து பார்க்காமல் உண்மை என்று நம்பும் ஒரு கூட்டம் இருக்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால், உண்மை வரலாறுகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அனைவரும் அனைத்துப் புத்தகங்களையும் படித்துவிட முடியாது. அவர்களுக்கு கேப்சூல் மாதிரி வரலாற்றை திரட்டி நாம் புகட்ட வேண்டும். அதற்கு, இதுபோன்ற போட்டிகள் மிகச் சிறந்த வழிமுறையாக இருக்கும்.

> **“நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகள் – மக்கள்நலத் திட்டங்கள் என்று 40 ஆயிரம் கேள்விகளை உருவாக்கியிருக்கிறார்கள்... உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் கேள்விகளைக் கேட்டதை விட, உங்களைப் படிக்க வைத்ததுதான் உள்ளபடியே பாராட்டுக்குரியது! இதுதான் இந்தக் 'கலைஞர் 100 – வினாடி–வினா' போட்டியின் மிகப்பெரிய வெற்றி! மிகப்பெரிய சிறப்பு”**

**கருத்துகளை விதைக்கும் களப்பணியை தொடர்க!**

அருமைச் சகோதரி கனிமொழிக்கு நான் வைக்கும் வேண்டுகோள்... வேண்டுகோள் அல்ல, உரிமையோடு சொல்கிறேன்... இதுபோன்ற கருத்துகளை விதைக்கும் களப்பணியை நீங்கள் தொடர வேண்டும்.

பேசிப் பேசி வளர்ந்த இயக்கம், இந்த இயக்கம். எழுதி எழுதி வளர்ந்த இயக்கம், இந்த இயக்கம். அப்படிப் பேச்சாளர்களை – எழுத்தாளர்களை இளந்தலைமுறையில் இருந்து உருவாக்க வேண்டும். புதிய புதிய செய்திகளை – புதிய புதிய கோணத்தில் சொல்ல வேண்டும். சொல் புதிது – சுவை புதிது – பொருள் புதிது – என்ற வகையில சொல்ல வேண்டும். மிக நீண்ட வரலாற்றுத் தகவல்களைக்கூட மிகச் சுவையாக – மக்கள் மனதில் பதியும் வகையில் சொல்ல வேண்டும். நம்முடைய கொள்கை வீரர்களின் பேச்சு நறுக்கென்று இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஒருவரின் பேச்சு, மூளையை தொட வேண்டும்! அதன் மூலமாக, அவர்கள் மனதை ரீச் செய்ய வேண்டும்! அப்படி நீங்கள் அனைவரும் கருத்து சொல்லும் ஸ்டைல்–ஐ உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

போட்டியில் கலந்துகொண்ட நிறையபேர் இங்கு இருக்கிறீர்கள்! நான் இப்போது சில கேள்விகளை உங்களிடம் கேட்கப்போகிறேன். பதில் தெரிந்தவர்கள் உட்கார்ந்தே சத்தமாகச் சொல்லுங்கள் போதும்! லெனின்தான் உங்களிடம் கேள்வி கேட்டார். இப்போது ஸ்டாலின் கேட்கப் போகிறார். முதல் கேள்வி எளிமையானது – 'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்று சொன்னது யார்? (தந்தை பெரியார்). இரண்டாவது கேள்வி – பேரறிஞர் அண்ணா அவர்கள் அறுவை சிகிச்சைக்கு முந்தைய நாள் டாக்டரிடம், “நான் படிக்கும் புத்தகத்தை, நாளை படித்து முடித்துவிடுவேன், அதன்பிறகு அறுவை சிகிச்சையை வைத்துக் கொள்ளலாம்” என்று சொன்னார். அது என்ன புத்தகம்? (மேரி கரோலி எழுதிய தி மாஸ்டர் கிறிஸ்டியன்). மூன்றாவது கேள்வி – தந்தை பெரியார் “எனது பகுத்தறிவு சமூகசீர்திருத்தப் பணியின் முன்னோடி” என்று யாரைச் சொன்னார்? (அயோத்திதாசப் பண்டிதர்).

**கனிமொழிக்கும் – மகளிரணிக்கும் என்னுடைய நன்றி!**

இவை சாதாரண கேள்விகள்தான். இதுபோன்று அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில், தியாக வரலாற்றை – நம்முடைய இயக்கத்தின் வரலாற்றை மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் உங்களுடைய பணி அமைந்திட வேண்டும். அதற்கு இதுபோன்ற வினாடி–வினா நிகழ்ச்சிகள் நிச்சயமாகப் பயன்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்து, இதை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, நடத்திக்காட்டி, அதில் வெற்றி கண்டிருக்கும் நம்முடைய தங்கை கனிமொழி அவர்களுக்கும், அவருக்கு துணைநின்ற மகளிரணிக்கும், அனைவருக்கும் மீண்டும் மீண்டும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ்

# 25 இளம் வல்லுநர்கள் தேர்வு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, நவ. 24 -

முதலமைச்சர் அவர்களின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் 2024-26 ஆம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 25 இளம் வல்லுநர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் பல முக்கிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு தொழில் மற்றும் கல்விப் பின்புலத்தைச் சார்ந்த இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (2022 24) அறிவிக்கப்பட்டு திருச்சியிலுள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தை கல்விப் பங்காளராகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 30 இளம் வல்லுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் 11 நபர்கள் பல்வேறு உயர் பணி வாய்ப்புகள் கிடைத்து சென்ற நிலையில், இரண்டு வருடங்களை பூர்த்தி செய்த 19 நபர்களுக்கு “பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்” முதுகலைச் சான்றிதழ்கள் துணை முதலமைச்சர் அவர்களால் 25.10.2024 அன்று வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் 2024-26ல் செயல்படுத்த 25 இளம் வல்லுநர்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, முதற்கட்ட தேர்வு



(கணினி அடிப்படையிலானது), விரிவான தேர்வு (எழுத்துத் தேர்வு) மற்றும் நேர்முகத் தேர்வு என மூன்று கட்டங்களாக தேர்வுகள் நடத்தப்பட்டன.

இத்திட்டத்திற்கான முதற்கட்டத் தேர்வு 15.09.2024அன்று நடைபெற்றது. அத்தேர்வில் 5,327 நபர்கள் பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து, அதில் தேர்வான 501 நபர்களுக்கு விரிவான எழுத்துத் தேர்வு 6.10.2024 அன்று நடத்தப்பட்டது. அதிலிருந்து நேர்முகத்தேர்விற்காக 177 நபர்களை தேர்வு செய்து அவர்களுக்கான நேர்முகத் தேர்வு 19.11.2024, 20.11.2024 மற்றும் 21.11.2024 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் 2024 - 26ன் கீழ் இறுதியாக தேர்வு செய்யப்பட்ட 25 இளம் வல்லுநர்களின் இறுதிப்பட்டியல் 22.11.2024 அன்று வெளியிடப்பட்டது.

தேர்வு செய்யப்பட்டுள்ள 25 இளம் வல்லுநர்களுக்கு, அரசின் உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு 30 நாட்கள் வகுப்பறை பயிற்சியும் மற்றும் மாவட்டங்களில் துறைரீதியான பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. அதன் பிறகு 25 இளம் வல்லுநர்களும் அரசின் பல்வேறு துறைகளின் அரசின் திட்டங்களில் 2 ஆண்டுகள் இணைந்து செயல்படுவர்.

மேலும், பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் மூலமாக பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு பயிற்சி வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 25 இளம் வல்லுநர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது, 2024-26 ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாய்வுத் திட்டத்திற்கு (Fellowship Programme) தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் இந்த மதிப்புமிக்க முயற்சியின் மூலம் நீங்கள் ஒவ்வொருவரும் கற்று முன்னேறி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

**இயக்குநர் பி.அமிர்தம் வரவேற்புரை! ஜி.ராமானுஜம் முன்னிலை! புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரை!**

# முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு இசை விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி – நூலை வெளியிட்டு விழாச் சிறப்புரை!

சென்னை, நவ. 24-

சென்னை - 28, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் முத்தமிழ்ப் பேரவையின் பொன் விழா ஆண்டு இசை விழா - விருதுகள் வழங்கும் விழா இன்று (24.11.2024 - ஞாயிறு) மாலை 4.30 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முத்தமிழ்ப் பேரவைச் செயலாளர் இயக்குநர் பி.அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்.

முத்தமிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.ராமானுஜம் முன்னிலை வகிக்கிறார். விழாவில் 'கலைஞர்' விருது பெறும் புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை சரிதம் நூலை வெளியிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

மிருதங்கச் செல்வம் - கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் நன்றி கூறுகிறார்.

24.11.2024 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் - மங்கள இசையுடன் தொடங்கும் இவ்விழாவில் கலைமாமணி திருப்பாம்புரம் சகோதரர்கள் டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம், டி.எஸ்.என்.சேஷகோபாலன் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி திருப்பங்கூர் டி.ஜி. முத்து குமாரசாமி, சுவாமிமலை சி.குருநாதன் ஆகியோர் சிறப்பு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6 மணியளவில் - விருது வழங்கும் விழா நடை பெறுகிறது.

கலைஞர் விருதை - புரட்சித் தமிழன் சத்யராஜியும், ராஜ ரத்னா விருதை - திருப்பாம்புரம் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரமும், இயல் செல்வம் விருதை - ஆண்டாள் பிரியதர்ஷினியும், இசைச் செல்வம் விருதை - முனைவர் காயத்ரி கிரீஷும், நாதஸ்வரச் செல்வம் விருதை - திருக்கடையூர் டி.எஸ். எம்.உமாசங்கரும், தவில் செல்வம் விருதை - சுவாமி மலை சி.குருநாதனும், கிராமியக் கலைச் செல்வம் விருதை - முனைவர் தி.சோமசுந்தரமும், நாட்டியச் செல்வம் விருதை - பார்வதி ரவி கண்டசாலாவும் பெறுகின்றனர்.

நவ.25,26,27 மூன்று நாட்கள் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

25.11.2024 திங்கள் மாலை 5.30 மணியளவில் – கலைமாமணி நாதஸ்வரச் செல்வம் திருக்கடையூர் டாக்டர் டி.எஸ்.முரளிதரன், திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமாசங்கர் ஆகியோர் நாதஸ்வரமும், தாராபுரம் வி.எம்.கணேஷ் தவில் இசை கலாரத்னாகரம், இடும்பாவனம் கே.எஸ். கே.மணிகண்டன் ஆகியோர் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - ஷண்முக சங்கீத சிரோன்மணி விக்னேஷ் ஈஸ்வர் பாட்டும், சாயிரக்ஷித் வயலினும், மிருதங்கச் செல்வம் சங்கீதா கலாநிதி, கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் மிருதங்கமும், பிஸ்மில்லாகான், யுவபுரஷ்கார் விருதாளர் அனிருத் ஆத்ரேயா கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் வழங்கும் கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

26.11.2024 - செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் – செம்பனார் கோயில் வித்வான் எஸ்.ஆர்.ஜி.எஸ். மோகன்தாஸ், திருமயிலை கே.செல்வம் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி மன்னார்குடி எஸ்.ஆர்.வாசுதேவன் சிறப்பு தவிலும், தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - அக்கரை சகோதரிகள் எஸ்.சுபலட்சுமி, எஸ். சொர்ணலதா ஆகியோர் பாட்டிசைக்கின்றனர். விட்டல் ரங்கன் வயலினும், டெல்லி சாய்ராம் மிருதங்கமும் பி.ஸ்ரீசுந்தரகுமார் கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா, கலா பிரதர்ஷினி நடனப் பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

27.11.2024 புதன்கிழமை - மாலை 5.30 மணியளவில் - சங்கீத நாடக அகாடமி யுவ புரஸ்கர் விருதாளர்கள் சின்னமனூர் முனைவர் ஏ.விஜய் கார்த்திகேயன், இடும்பாவனம் வி.பிரகாஷ் இளையராஜா ஆகியோர் நாதஸ்வரமும் தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு சிறப்பு தவிலும், கலைஞான சிகரம் இடும்பாவனம் கே. எஸ்.கே.மணிகண்டன் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் – முனைவர் காயத்ரி கிரிஷ் பாட்டும், பி.அனந்த கிருஷ்ணன் வயலினும், என்.சி.பரத்வாஜ் மிருதங்கமும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி குரு முத்தரசி ரவி, கலைக் கோயில் நாட்டியப்பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டுமாய் விழாக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.